எனது இல. : PRE/10/06
தேர்தல்கள் திணைக்களம்,
சரண மாவத்தை, ராஜகிரிய.
24.11.2009

**முக்கியமானதும் அவசரமானதும்**
சுற்றறிக்கை இல : 2010- PRE -01-St

சகல அமைச்சுக்களினதும் செயலாளர்,
அணைத்து மாகாணசபைகளினதும் பிரதான செயலாளர்கள்,
சகல திணைக்களங்ளினதும் தலைவர்கள்,
சகல கூட்டுத்தாபனங்களினதும் நியதிச்சட்ட சபைகளினதும் தவிசாளர்கள்.

**சனாதிபதித் தேர்தல் - 2010**
**பணியாட்களின் தேவைகள்**

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலுக்காக அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையிலுள்ள பெருமளவு எண்ணிக்கையினரான அலுவலர்கள் பணிக்கமர்த்தப்பட வேண்டியுள்ளதோடு பெருமளவிலான வாகனங்களும் தேவைப்படுகின்றன. ஆதலால் சகல அரசாங்க, மாகாண அரசாங்க அலுவலகங்களுக்குச் சொந்தமான அலுவலர்கள், வாகனங்கள் தொடர்பான கணிப்பீடொன்று தேவைப்படுகின்றது. (கூட்டுத்தாபனங்கள், சபைகள் என்பவற்றிடமிருந்து வாகனங்கள் தொடர்பான விபரங்களுக்கு மேலதிகமாக அந்நிறுவனங்களுக்கு விடுகை பெற்று வந்துள்ள அலுவலர்களின் பெயர்கள் தொடர்பான விபரங்கள் மாத்திரமே சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.)

02. எந்தவிதத்திலும் காலந்தாழ்த்த முடியாத அத்தியாவசிய அரச சேவைகளை நடாத்துவதற்குத் தேவைப்படுபவர்கள் மாத்திரம் தவிர்ந்த ஏனைய அனைத்து அரச அலுவலர்களையும் வாக்கெடுப்புப் பணிகளில் அமர்த்துவதற்காக இத்திணைக்களத்திற்கு வழங்குவது மிக அவசியமாகும். தேர்தல் நடைபெறும் நாளிலும் அதனை அண்மித்த நாட்களிலும் அரச அலுவலகங்களின் சாதாரண பணிகள் கட்டாயம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட வேண்டியதோடு, இவ்வாக்கெடுப்பு ஒரே நாளில் மேற்கொள்ளப்படவுள்ளதால் அத்தியாவசிய சேவைகளுக்குப் பயன்படுத்தப்பட வேண்டிய அலுவலர்களின் எண்ணிக்கையை பெருமளவில் மட்டுப்படுத்த முடியும். வாக்கெடுப்புக் கடமைகளில் ஈடுபடுகின்றமை காரணமாக தத்தமக்குரிய வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்க முடியாத அனைத்து அரச அலுவலர்கட்கும் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு அவகாசமளிக்கும் ஏற்பாடுகளை தேர்தல்கள் சட்டம் உள்ளடக்கியுள்ளது. அஞ்சல் வாக்களிப்பு வாய்ப்புக்கள் தொடர்பான அறிவுறுத்தல்கள் உரிய காலப்பகுதியில் தங்களுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனவோடு அச்சிடல் மற்றும் இலத்திரனியல் தொடர்புச் சாதனங்களூடாகவும் பிரச்சாரம் செய்யப்படும். அவ்வறிவுறுத்தல்களை நன்கு பரிசீலனை செய்து சட்டத்தால் விதிக்கப்பட்டுள்ள காலக்கெடுவுக்குள் அஞ்சல் வாக்குகளுக்கான வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிப்பதை இயலச் செய்யும் விதத்தில் போதிய கால அவகாசம் இருக்கும் போதே தங்களது பணியாட்களுக்கு இவ்வறிவுறுத்தல்களை தயவுசெய்து கிடைக்கச் செய்யவும். அஞ்சல் வாக்குக்காக விண்ணப்பிக்காமை, சரியான தகவல்களை சமர்ப்பிக்கத் தவறியமை, விண்ணப்பங்களை காலந்தாழ்த்தி சமர்ப்பித்தமை, விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டமை போன்றவை வாக்கெடுப்புக் கடமைகளிலிருந்து விலக்குப் பெறுவதற்கான காரணங்கள் அல்ல என்பதை உரிய அனைத்து அலுவலர்களுக்கும் கட்டாயம் அறிவித்தல் வேண்டும்.

03. வாக்கெடுப்பு நிலையங்கள் / வாக்கெண்ணும் நிலையங்கள் என்பவற்றில் பணிக்கமர்த்தப்படுவதற்காக தங்களது நிறுவனத்தில் பணிபுரியும் அனைத்து ஆண் அலுவலர்களினதும் பெண் அலுவலர்களினதும் விபரங்களை இத்தோடுள்ள விண்ணப்பப்படிவங்களில் ஒவ்வொரு ஆண், பெண் அலுவலர் மூலமாகவும் உட்சேர்த்து இதற்குப் பொறுப்பான பதவிநிலை அலுவலர் ஒருவர் அத்தாட்சிப்படுத்தி CSEP படிவத்தையும் பூர்த்தி செய்து கீழ் காணப்படும் விபரங்களடங்கிய இணைப்புக் கடிதத்தோடு இச்சுற்றறிக்கை கிடைத்து 02 வாரங்களுக்குள் கிடைக்கத்தக்கவாறு தேர்தல் செயலகத்திற்கு அல்லது கொழும்பு மாவட்ட தேர்தல் அலுவலகத்திற்கு அல்லது அந்தந்த மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு (மாவட்டச் செயலாளர்/ அரசாங்க அதிபர்) அனுப்புதல் வேண்டும். இவ்விண்ணப்பப்படிவங்களின் மேலதிக பிரதிகள் தேவைப்படின் மாவட்டச் செயலாளர் அலுவலகத்திலிருந்தோ/ மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ள முடியும். கீழ்வரும் வகுதிகளுக்குரிய அலுவலர்கள் தவிர்ந்த தங்களது அலுவலகத்தில் பணிபுரியும் அணைத்து ஆண், பெண் அலுவலர்கள் மூலமும் இம்மாதிரிப்படிவங்களை நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

1. இதற்கு முன்னர் நடைபெற்ற ஏதேனும் தேர்தலொன்றில் வேட்பாளராக போட்டியிட்டுள்ள எவரேனும் ஓர் அலுவலர் அல்லது செயற்பாடுடைய அரசியற்கட்சிகளில் ஈடுபட்டுள்ள அலுவலர் ;
2. நிறைமாத கர்ப்பிணித்தாய்மாரான பெண் அலுவலர்கள் ;
3. தாய்ப்பாலூட்டும் சின்னஞ்சிறு கைக்குழந்தைகள் உள்ள பெண் அலுவலர்கள் ;
4. வாக்கெடுப்புக் கடமைக்காக தொலைதூரம் பயணம் செய்ய முடியாத அங்கவீன நிலையில் உள்ள ஆண், பெண் அலுவலர்கள் ;
5. அடுத்துறும் 3 மாத காலத்திற்குள் அரச சேவையிலிருந்து ஓய்வு பெறவுள்ள ஆண், பெண் அலுவலர்கள் ;

6. ஒப்பந்த அடிப்படையில் சேவையில் சேர்க்கப்பட்டுள்ள ஆண், பெண் அலுவலர்கள் ;

ஏனைய அனைத்து ஆண், பெண் அலுவலர்கள் மூலமும் விண்ணப்பப்படிவங்கள் நிரப்பி அனுப்பப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை தொடர்பாக சிரேட்ட பதவிநிலை அலுவலர் ஒருவர் அவதானம் செலுத்துதல் வேண்டும். இவ்வலுவலர் CSEP படிவத்தில் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் கையொப்பமிடும் அலுவலராயிருத்தல் வேண்டும்.

ஓர் அலுவலர் ஒரு விணண்ப்பப்படிவத்தை மாத்திரம் சமர்ப்பித்தல் போதுமானது. அமைச்சு/ திணைக்கள அலுவலர்கள் வேறு அலுவலகங்களுக்கு இணைக்கப்பட்டிருந்தால் அவர்கள் அவ்வலுவலகங்களுடாகவே விபரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

இக் கணக்கெடுப்புப் படிவங்கள் கீழே காணப்படும் விதத்தில் நான்கு விநியோகிக்கப்பட்டுள்ளனவோடு, அலுவலர்கள் பற்றிய தகவல்கள் சாராம்சப்படுத்திக் காட்டப்படுவதற்கென CSEP1 படிவமும் (அலுவலகம்) CSEP2 படிவமும் (பாடசாலை) வழங்கப்பட்டுள்ளது.

இணைப்பு 1 – உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள்/ சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்கள் (ஆண், பெண்) ARO/SPO (M/F)

இணைப்பு 2 – கனிட்ட தலைமைதாங்கும் அலுவலர்கள்/ எழுதுநர்கள் (ஆண்கள்) JPO/CL(M)

இணைப்பு 3 – கனிட்ட தலைமைதாங்கும் அலுவலர்கள்/ எழுதுநர்கள் (பெண்கள்) JPO/CL(F)

இணைப்பு 4 – அதிபர் சேவை/ ஆசிரியர் சேவையைச் சேர்ந்தவர்கள் SCH

மேலே குறிப்பிடப்பட்டுள்ள ARO(M). ARO (F). SPO (M) SPO(F), JPO(M). JPO(F), CL(M), CL(F) ஆகிய அலுவலர்களுக்கும், ஆசிரிய ஆசிரியைகளுக்கும் பொருத்தமான விதத்தில் வெவ்வேறான CSEP படிவங்கள் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.

**04. அலுவலர்கள் தொடர்பான விபரங்களை அனுப்பிவைக்கும் பொறுப்பு :-** அமைச்சொன்றாயின் சிரேட்ட உதவிச் செயலாளர் ஒருவரினதும், திணைக்களமொன்றாயின் மேலதிக அல்லது பிரதி திணைக்களத் தலைவரொருவரினதும், நியதிச் சட்ட சபை அல்லது கூட்டுத்தாபனமொன்று தொடர்பாயின் மேலதிக பொது முகாமையாளர் ஒருவரினது தரத்திற்குக் குறையாத பதவி வகிக்கும் ஓர் அலுவலரினதும் பொறுப்பில் விடப்படல் வேண்டும்.

**05. விலக்குப் பெறல் :-** உரிய திணைக்களத் தலைவரினால் குறிப்பாக தேர்தல் கடமைகளிலிருந்து விலக்களிக்கப்படுவதற்கு விதந்துரைக்கப்பட்டால் ஒழிய ஒவ்வோர் அலுவலரினதும் சேவையை தேர்தல் கடமைக்காக பெற்றுக்கொள்ள முடியும் என்று கருதப்படும். தங்களது அல்லது தங்களது எவரேனும் ஒரு பிரதேச அலுவலரினது கருத்திற்கிணங்க தாமதஞ் செய்ய முடியாத ஏதேனும் அத்தியாவசியக் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளமையால் அல்லது ஓர் அலுவலரின் தனிப்பட்ட காரணத்தினால் எவரேனும் ஓர் அலுவலரின் சேவையை தேர்தல் கடமைக்காக வழங்க முடியாமலிருப்பின், அதற்கான காரணத்தை விண்ணப்பப்படிவங்களில் விலக்குப் பெறுவதற்கான காரணத்தைக் குறிக்கவுள்ள இடத்தில் குறித்துக் காட்டி தங்களால் வேறொரு கடிதத்தின் மூலம் விதந்துரைக்கப்படுதலும் வேண்டும். (தேவையாயின் மேலதிக விபரங்களை வேறொரு தாளில் எழுதி அப்படிவத்தோடு இணைத்து அனுப்புதல் வேண்டும்). அத்தகைய விதப்புரைகளை கடிதம் ஒன்றின் மூலம் திணைக்களத் தலைவர் தனிப்பட்ட முறையில் அங்கீகரித்தலும் வேண்டும்.

06. **ஆரம்பக் கணக்கெடுப்பு ஆவணங்களும், அலுவலர் தகவல் படிவங்களும் அனுப்பப்பட வேண்டிய முறை**

**06.01 தேர்தல் செயலகததிற்கு அனுப்பட வேண்டிய கணக்கெடுப்பு ஆவணங்கள்.**

(அ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட சகல அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரச அலுவலகங்கள்
(ஆ) இசுருபாய, செத்சிரிபாய, சம்பத்பாய, கொவிஜன மந்திரய ஆகிய அலுவலகக் கட்டிடங்களில் அமைந்துள்ள சகல அலுவலகங்கள்
(இ) பத்தரமுல்ல பகுதியில் அமைந்துள்ள இலங்கை பரீட்சைத் திணைக்களம், பதிவாளர் நாயகத் திணைக்களம் மேல் மாகாணத்தின் மாகாண சபை அமைச்சுக்கள் மற்றும் பாராளுமன்றக் கட்டிடத்தொகுதியிலுள்ள அலுவலகங்கள்

ஆகிய சகல அலுவலகங்களிலும் கடமையாற்றும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் வகுதிக்குரிய சகல அலுவர்களினதும் (ஆண்/பெண்) தகவல் படிவங்களும் (ARO (M/F), சிரேட்ட தலைமைத் தாங்கும் அலுவலர் தரத்திலுள்ள சகல ஆண் அலுவலர்களின் தகவல் படிவங்களும் (SPO (M), ஆரம்ப கணக்கெடுப்பு படிவங்களும் (CSEP 1) பூர்த்தி செய்யப்பட்டு ராஜகிரிய தேர்தல் செயலகத்தின் பிரதித் தேர்தல் ஆணையாளருக்கு (நிர்வாகம் ) அனுப்பி வைக்கப்பட வேண்டும். உதவி தெரிவத்தாட்சி அலுவலர்களின் தகவல் படிவம் பூர்த்தி செய்யப்படும் போது பெயர், பதவி, அலுவலக முகவரி ஆகிய வற்றை முக்கியமாக ஆங்கிலத்தில் எழுதுதல் வேண்டும்.

**06.02 கொழும்பு மாவட்ட தேர்தல் அலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டிய கணக்கெடுப்பு ஆவணங்கள்**

(அ) மேலே 06.01 இல் குறிப்பிடப்பட்ட அலுவலகங்களின் ஏனைய அலுவலர்களின் தகவல் (SPO (F), JPO/CL (M), JPO/CL(F) ) படிவங்களும் , ஆரம்ப கணக்கெடுப்புப் படிவங்களும் (CSEP 1),

(ஆ) மேலே 06.01 இல் குறிப்பிடப்படாத கொழும்பு மாவட்டத்தின் ஏனைய அரச அலுவலகங்களிலுள்ள சகல அலுவலர்களினதும் விபரப் படிவங்களும் (ARO(M/F), (SPO (F), JPO/CL (M), JPO/CL (F) படிவங்களிலும், ஆரம்ப கணக்கெடுப்புப் படிவங்களும் (CSEP 1)

(இ) கொழும்பு மாவட்டத்திலுள்ள சகல அரச பாடசாலைகளிலும் உள்ள பாடசாலை அதிபர்கள், ஆசிரிய, ஆசிரியைகள் ஆகியோரின் (SCH) படிவங்களும், ஆரம்பக் கணக்கெடுப்புப் படிவங்களும் (CSEP 2)

தெரிவத்தாட்சி அலுவலர், கொழும்பு தேர்தல் அலுவலகம், 395, பழைய கோட்டே வீதி, ராஜகிரிய என்னும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்,

06.03 **கொழும்பு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அனுப்பப்பட வேண்டிய கணக்கெடுப்பு படிவங்கள்**

(அ) கொழும்பு தவிர்ந்த ஏனைய சகல மாவட்டங்களிலுள்ள சகல அரச அலுவலகங்களிலும் கடமையாற்றுகின்ற அலுவலர்களினது தகவல் படிவங்களும் (ARO(M/F), (SPO(F), JPO/CL (M), JPO/CL (F) ஆரம்பக் கணக்கெடுப்புப் படிவங்களும் (CSEP 1) பூர்த்தி செய்யப்பட்டு அவ்வவ் மாவட்ட பிரதி/ அலுவலர்க்கு அல்லது தேர்தல் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(ஆ) கொழும்பு தவிர்ந்த ஏனைய சகல மாவட்டங்களிலும் உள்ள சகல அரச பாடசாலைகளிலும் கடமையாற்றுகின்ற பாடசாலை அதிபர்கள், ஆசிரிய, ஆசிரியைகள் ஆகியோரின் தகவல் படிவங்களும் (SCH), ஆரம்பக் கணக்கெடுப்புப் படிவங்களும் (CSEP 2) பூர்த்தி செய்யப்பட்டு அவ்வவ் மாவட்ட பிரதி /சிரேஷ்ட உதவி/ உதவி தேர்தல் ஆணையாளர்களினால் அறிவிக்கப்பட்டுள்ளவாறு அவ்வவ் மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அல்லது தேர்தல் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

07. அந்தந் அலுவலர்களின் தகவல்களை விண்ணப்படிவத்தில் சேர்க்கும் போது கீழ்க்காணும் திட்டத்தின் விபரங்களுக்கு அமைவாக சேர்த்தல் வேண்டும். தற்காலிக /அமய /பதிலீடு /மீள் சேவையிலீடு படுத்தப்பட்டுள்ள ஓய்வு பெற்ற அலுவலர்கள் ஆகியோரது விபரங்களை உட்சேர்த்தலாகா.

## திட்டம்

**(அ) உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் :-**

(I) ரூபா. 22935-10x645-8x790-17x1050-53555 மாதாந்த சம்பளத் திட்டத்தையோ அதற்கு மேற்பட்ட சம்பளத்திட்டத்தையோ உரிய நாடளாவிய சமாந்தர முகாமைத்துவ சேவைகளைச் சார்ந்த அலுவலர்கள்.

**குறிப்பு** :- நாடாளாவிய சமாந்தர முகாமைத்துவ சேவைக்கு உரித்தான அல்லது அதனோடு சமாந்தரமான மூடப்பட்ட சேவைகளுக்குரிய அல்லது நிறைவேற்று அலுவலர்கள் இதற்கு முன்னர் நடைபெற்ற வாக்கெடுப்புக்களின் போது வாக்கெடுப்பு நிலைய கடமைகளில் ஈடுபட்டு அது தொடர்பான அனுபவத்தை பெற்றிராவிடின் அத்தகைய அலுவலர்கள் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களாக வாக்கெடுப்புக் கடமைகளில் ஈடுப்படுத்தப்படவுள்ளனர்.

(II) ரூபா. 240360/- ரூபா. 275400/- என்பவற்றிற்கிடைப்பட்ட ஆரம்ப சம்பளத்தைக் கொண்ட (சம்பளத் திட்டமொன்றின் 271020/- ரூபாவை அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை வருடாந்த சம்பளமாக (மாதாந்தம் ரூபா. 22585/-) க் கொண்ட நாடளாவிய முகாமைத்துவ உதவியாளர் சேவைகளைச் சேர்ந்த அதியுயர் (விசேட) தர அலுவலர்களும், அதனுடனான சமாந்தர சேவைகளை சேர்ந்த அலுவலர்களும், மற்றும்

**(ஆ) சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்கள் :-**

(I) மேற்குறித்த (அ) II இன் ரூபா. 271020/- க்குக் குறைந்த வருடாந்த சம்பளத்தை (மாதாந்தம் ரூபா. 22585/- லும் குறைந்த சம்பளத்தைப் ) பெறும் அலுவலர்களும்,

(II) அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையினதும் சமாந்தர சேவைகளினதும் I ஆம் வகுப்பைச் சேர்ந்த அலுவலர்கட்குரிய ரூபா. 17550/-6x240-14x320-23230 மாதாந்த சம்பளத் திட்டத்தையோ அதற்கு மேற்பட்ட சம்பளத் திட்டத்தையோ கொண்ட ரூபா. 216360/- க்கு குறையாத வருடாந்த சம்பளத்தைக் (மாதாந்தம் ரூபா. 18030/-) கொண்ட அலுவலர்களும்,

(III) ரூபா 18030/- லும் பார்க்க கூடுதலான படிகளடங்காத மாதாந்த சம்பளத்தைப் பெருகின்ற சார்பு அலுவலர்கள் மற்றும் அலுவலகம் சார்ந்த /வெளிக்கள அலுவலர்கள் (ஆட்சேர்ப்புத் தகைமையாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டம் தேவைப்படுத்தப்பட்டுள்ள அலுவலர்கள்)

**குறிப்பு :** 1. 216,360/- ரூபாவை அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த சம்பளத்தைக் (மாதாந்தம் 18030/- வை அல்லது அதனிலும் மேற்பட்ட மாதாந்த சம்பளத்தை) கொண்டிருந்த போதிலும் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர் ஒருவருக்கு காணப்பட வேண்டிய வினைத்திறனையும் ஆற்றலையும் அத்தாட்சிப்படுத்த முடியாத வேறு விடயங்களில் திறமை காட்டுகின்ற அலுவலர்களை சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்களாக வகைப்படுத்தாமல் அவர்கள் மூலமாக கனிட்ட தலைமைதாங்கும் அலுவலர்கட்குரிய படிவங்களை நிரப்பிக் கொள்ளுதல் வேண்டும்.

2. மேலே IIஇல் குறிப்பிட்ட சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான சம்பளத்திட்டத்தை (மாதாந்த சம்பளம் ரூபா 18030/- ) குறைவான சம்பளத்தை பெறுகின்ற போதிலும் இதற்கு முன்னர் தேர்தல்களின் போது வாக்கெடுப்பு நிலையத்திற்குப் பொறுப்பாக சிரேஷ்ட தலைமை தாங்கும அலுவலராக கடமையாற்றியிருக்கும் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் 1ஆம் தரத்தில் (அல்லது அதற்குச் சமமான சேவைகளில் 1ஆம் தரத்தில்) உள்ள அலுவலர்களும், அதற்கு சமாந்தரமாக உயர் தர சேவைகளிலுள்ள அலுவலர்களும் சேவையை பெருத்து சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலராக நியமிக்கப்பட இடமிருப்பதால் அவ்வாறான அலுவலர்கள் தமது தகவல் படிவங்களுடன் (ARO/SPO) தேர்தல் கடமைகள் தொடர்பான தமது அனுபவங்கள் பற்றி விசேடமாக குறிப்பிடல் வேண்டும்

3. ஆட்சேர்ப்பு தகைமையாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டம் தேவைப்படுத்தப்படுகின்ற சார்பு அலுவலர்கள் மற்றும் அலுவலகம் சார்ந்த/ வெளிக்கள் அலுவலர் பதவி வகிக்கின்ற அலுவலர்கள் மேற்குறித்த 18,030/- விற்குக் குறைவானதும் மற்றும் 16,935/- க்கு அதிகமானதுமான படிகளடங்காத மாதாந்த சம்பளத்தைப் பெறுகின்ற அதே வேளை இதற்கு முந்திய தேர்தல்களின் போது சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் ஒருவராக ஒரு முறையோ அல்லது கனிட்ட தலைமை தாங்கும் அலுவலராக மும்முறைகளோ வாக்கெடுப்பு நிலையக் கடமையில் ஈடுப்பட்டிருப்பின், அத்தகைய அலுவலர்களை சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களாக நியமனம் செய்தல் தொடர்பாக கருத்தில் கொள்ளப்படவுள்ளமையால் அவர்கள் தத்தம் தகவல் படிவங்களோடு (ARO/SPO) வாக்கெடுப்புக் கடமைகளின் அனுபவம் தொடர்பான பிரத்தியேக குறிப்பொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

(IV) இலங்கை அதிபர்கள் சேவையில் I ஆம் வகுப்பு , 2 – I ஆம் வகுப்புகளைச் சேர்ந்த அதிபர்கள்,

(V) இலங்கை ஆசிரியர்கள் சேவையில் I ஆம் வகுப்பைச் சேர்ந்த ஆசிரியர்கள்.

**(இ) கனிட்ட தலைமைதாங்கும் அலுவலர்கள் :-**

(I) மேற்போந்த (ஆ) III க்குப் பின்னருள்ள குறிப்பு 1க்கு அமைய கனிட்ட தலைமைதாங்கும் அலுவலர்களாக வகைப்படுத்தப்பட்ட அலுவலர்கள்,

(II) மேற்குறித்த (ஆ) (II) இன் கீழ் ரூபா. 17550-6x240-14x320-23320 மாதாந்த சம்பளத் திட்டத்தைக் கொண்ட வருடாந்தம் ரூபா. 216,360/- க்குக் குறைவான (மாதாந்தம் ரூபா. 18030/-) சம்பளத்தைப் பெறும் அலுவலர்கள்,

(III) மாதாந்தம் 18030/- க்குக் குறைவானதும் 16935/- அதிகமானதுமான சம்பளத்தை பெற்ற போதிலும் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவர்களாக நியமனம் செய்யப்படுவதற்குரிய அனுபவமில்லாத சார்பு நிலை மற்றும் அலுவலகம் சார்/ வெளிக்கள அலுவலர்களும் , மாதாந்தம் 16935/- க்குக் குறைவான சம்பளங்களைப் பெறும் அலுவலர்கள்.

(IV) ரூபா. 15610/-11x170-17310 என்ற மாதாந்த சம்பளத்திட்டத்தை அல்லது அதனிலும் கூடிய சம்பளத்திட்டத்தைக் கொண்ட வருடாந்தம் 187,320/- ரூபாவை அல்லது அதற்கு மேற்பட்ட (மாதாந்தம் ரூபா. 15610/- அல்லது அதற்கு அதிகமான சம்பளத்தைப் பெறும் அலுவலர்கள்,

(V) இலங்கை அதிபர் சேவையின் 2-II ஆம் வகுப்பையும் 3 ஆம் வகுப்பையும் சேர்ந்த அதிபர்கள்,

(VI) இலங்கை ஆசிரியர் சேவையில் 2-I ஆம் வகுப்பைச் சேர்ந்த ஆசிரியர்கள்.

**குறிப்பு :-** தமது ஆற்றல், பயிற்சி என்பவற்றிற்கு இணங்க கனிட்ட தலைமைதாங்கும் அலுவலர் ஒருவருக்கு இருக்க வேண்டிய வினைத்திறனை அத்தாட்சிப்படுத்த முடியாத வேறேதும் துறையில் ஈடுபாடு கொண்டுள்ள அலுவலர்களின் மூலம் எழுதுநர்களுக்கான படிவங்களை நிரப்பி சமர்ப்பித்தல் வேண்டும்.

**(ஈ) வாக்கெடுப்பு நிலைய எழுதுநர்கள் :-**

(I) மேற்குறித்த (இ) (VI) இன் பிற்குறிப்பில் காட்டப்பட்டுள்ள வகுதிக்குரிய அலுவலர்களும்,

(II) ரூபா. 13990-10x145-11x170-17310 என்ற மாதாந்த சம்பளத் திட்டத்தையோ அல்லது அதனிலும் கூடிய சம்பளத் திட்டத்தையோ கொண்ட ரூபா. 167,180/- வையோ அல்லது அதிலும் கூடிய வருடாந்த சம்பளத்தையோ பெறும் (மாதாந்தம் 13990/- ரூபாவையோ அல்லது அதனிலும் கூடிய சம்பளத்தைப் பெறும்) அலுவலர்கள்,

(IV) இலங்கை ஆசிரியர் சேவையில் 2-II, ஆசிரியர் சேவையில் 3-I, 3-II ஆம் வகுப்புகளைச் சேர்ந்த ஆசிரியர்களும், பயிலுநர் ஆசிரியர்களும்.

**குறிப்பு :-** மேற்குறித்த ஈ II ல் காட்டப்பட்டுள்ள சம்பளத்திட்டத்திலும் பார்க்க குறைந்த சம்பளத்திட்டத்தை (6/2006 பொது நிருவாக சுற்றறிக்கையின் MN-1 சம்பளத்திட்டம் உடைய தகுதிகாண் காலத்தைத் தாண்டிய அரசாங்க அலுவலர்கள் **சேவைத் தேவைப்பாடு ஏற்பட்டால் மாத்திரம்** வாக்கெடுப்பு நிலைய எழுதுநர்களாகப் பயன்படுத்தப்பட முடியுமாதலால் அத்தகைய அலுவலர்களும் தகவல் படிவங்களை நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

மேற்குறித்த அலுவலர்களின் வகைப்படுத்தலின் போது சம்பள அளவுத்திட்டங்கள் 2006.04.25 ஆந் தேதிய 06/2006 (IV) ஆம் சுற்றறிக்கை மற்றும் 2007.08.24 (IV) ஆம் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் 2007.12.31 ஆந் தேதி கொடுப்பனவு செய்யப்பட்ட சம்பளங்களை அடிப்படையாக வைத்தே கணக்கிடப்பட்டுள்ளன.

**08 பொது விடயங்கள் :-**

08.1 அலுவலர் ஒருவரின் சம்பளம் தொடர்பாக தீர்மானிக்கையில் அவருக்கு வழங்கப்படும் ஏனைய படிகள் கவனத்தில் கொள்ளப்படக்கூடாது.

08.2 CSEP விண்ணப்பப்படிவங்களை தயாரிக்கின்ற போது மிகக்கிட்டிய சேவை மூப்பு அடிப்படையில் வரிசைப்படுத்தி பெயர்கள் குறிக்கப்படல் வேண்டும். **அமைச்சுக்கள், திணைக்களங்கள், பாடசாலைகளுக்கான குறியீட்டு இலக்கங்கள் குறிப்பிடப்பட்டிருந்தால் CSEP படிவங்களில் தேவைப்படும் இடங்களில் அக்குறியீட்டு இலக்கங்களை குறிப்பிடல் அத்தியவசியமாகும்..**

08.3 தனது பிரிவுக்குள் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளுக்காக தெரிவத்தாட்சி அலுவலருக்கோ பொலிசிற்கோ ஒத்துழைப்பு வழங்க வேண்டிவரின் அவ்வாறு ஒத்துழைப்பு வழங்குவதற்காக பிரதேச செயலாளர்கள் தத்தம் பிரிவிற்குள் இருக்க வேண்டியுள்ளமையால் அவர்களின் பெயர்களை வாக்கெடுப்புப் பணிக்குழுவில் உள்ளடக்கத் தேவையில்லை.

08.4 தமது பதவிநிலை காரணமாக வாக்கெடுப்புக் கடமைகளுக்காக நியமனஞ் செய்யப்படுவதற்குப் பொருத்தமற்ற நீதிமன்ற அலுவலர்கள், பொலிஸ் சீருடையினர்கள், கிராம அலுவலர்கள் ஆகியோரிடமிருந்து இப்படிவங்கள் எதிர்பார்க்கப்படுவதில்லை.

08.5 கனிட்ட ஊழியர்களிடமிருந்தும் இப்படிவங்கள் எதிர்பார்க்கப்படுவதில்லை. ஆயினும், வாக்கெடுப்பின் பூர்வாங்கப் பணிகளுக்கு வழங்க முடிந்த கனிட்ட அலுவலர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுத்தருமாறு தெரிவத்தாட்சி அலுவலர் கோருகின்ற சந்தர்ப்பங்களில் அவர்களை விடுவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

08.6 அலுவலர்கள் மூலம் விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து சமர்ப்பிக்கையில் அமுல் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள இடமாற்றங்கள் இருப்பின் அவற்றையும் கருத்தில் கொள்ளல் வேண்டும். அத்தகைய வகுதிக்குள் அடங்கும் அலுவலர்கள் இருப்பின் இடமாற்றம் தொடர்பான கட்டளையின் பிரதியொன்றையும் அலுவலர் உரிய தினத்தில் புதிய அலுவலகத்தில் கடமையை கையேற்க விடுவிப்பது தொடர்பான கடிதமொன்றையும் உரிய அலுவலரின் படிவத்தோடு எளிதில் கழன்றுவிடாதவாறு நன்றாகப் பொருத்தி அனுப்பி வைக்கவும்.

**09. அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் என்பவற்றிடமிருந்து தேவைப்படுகின்ற ஏனைய உதவிகள்**

பணியாட் குழுவினர்களை மற்றும் வாகனங்களை வழங்குவதற்கு மேலதிகமாக இத்தேர்தல்களோடு தொடர்புடைய வெவ்வேறு விடயங்களிலும் செயலாளர்களின் மற்றும் திணைக்களத் தலைவர்களின் போன்றே அந்தந்த மாவட்டங்களிலுள்ள அவர்களின் முகவர்களினதும் ஒத்துழைப்பு சில வேளைகளில் எனக்கும் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் தேவைப்படுகின்ற சந்தர்ப்பங்கள் எழக்கூடும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் தங்களது பூரண ஒத்துழைப்பை நல்குமாறு கேட்டுக்கொள்கின்ற அதேவேளை, மாவட்டங்களிலுள்ள தங்கள் பிரதேச அலுவலர்களுக்கும் அவ்வாறு ஒத்துழைப்பு வழங்குமாறு அறிவுறுத்தும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

**10.** 17 ஆம் அரசியலமைப்புத் திருத்தத்தினால் திருத்தியமைக்கப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஊ(1),(2) மற்றும் 104(எ) ஆம் உறுப்புரைகளில் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கமைய இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது.

தயானந்த திசாநாயக்க,
தேர்தல்கள் ஆணையாளர்.

DelNW/w/Elec-10/Staff-2010